12.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடைகளுக்கு காப்பீடு செய்யலாம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், தங்களது கால்நடைகளுக்கு காப்பீடு செய்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில், காப்பீடு செய்யப்படும் கால்நடைகளுக்கு நோய், இயற்கை இடர்பாடுகள் மூலமாக இறப்பு ஏற்பட்டால், இழப்பை ஈடுசெய்து வேறு கால்நடைகள் பெறுவதற்கு உறுதி செய்யப்படும்.

இத்திட்டத்தில் காப்பீடு செய்து கொள்ள, கால்நடை வளர்ப்போரின் பங்காக ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.250-ம், தாழ்த்தப் பட்டோர் ரூ.150-ம், ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.396-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.293-ம், ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.539-ம், தாழ்த்தப்பட்டோர் 438-ம், ரூ.35 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.683-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.579-ம், ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.820-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.723-ம் செலுத்த வேண்டும்.

இம்மாவட்டத்தில், கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளை காப்பீடு செய்து கொள்ள, அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி பயன்பெறலாம்.

## பெரியாறு அணையில் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதில் காலதாமதம்: இறவை பாசனத்தில் முதல்போக நெல் சாகுபடி தொடக்கம்

தேனி மாவட்டத்தில் 14,707 ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல் சாகுபடிக்கு பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், உத்தமபாளையம் பகுதியில் இறவைப் பாசன வயல்களில் மட்டும் முதல் போக சாகுபடிக்கு நெல் நாற்று நடவுப் பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் பெரியாறு அணை தண்ணீரைப் பயன்படுத்தி 14,707 ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல் சாகுபடி நடைபெறுகிறது. பெரியாறு அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு வழக்கமாக ஜூன் 2 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு கோடை மழை பொய்த்ததாலும், தென்மேற்குப் பருவமழை காலதாமதமாக தொடங்கியதாலும், பெரியாறு அணையில் போதிய தண்ணீர் இருப்பில்லாமல், அணையில் இருந்து தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், பெரியாறு அணையில் உரிய காலத்தில் தண்ணீர் திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் இறவை பாசன வயல்களில், ஊற்று நீரைப் பயன்படுத்தி ஜூன் முதல் வாரத்தில் பல்வேறு இடங்களில் நெல் நாற்றாங்கால் தயாரிப்பில் ஈடுபட்ட விவசாயிகள், தற்போது வரை அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்காததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

சில இடங்களில் தண்ணீரின்றி 25 நாள்கள் பருவம் முதிர்ந்த நெல் நாற்றுகள் நடவு செய்ய முடியாமல் வீணாகியுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர். உத்தமபாளையம் பகுதியில் சில இடங்களில் இறவை பாசன வயல்களில் மட்டும் நெல் நாற்று நடவு பணி தொடங்கியுள்ளது.

பெரியாறு அணையில் இருந்து தேனி மாவட்ட முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில், வழக்கத்துக்கு மாறாக ஜூன் மாதம் கடந்த பின்பும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், நடப்பு குறுவை பருவத்தில் நெல் அறுவடைப் பணிகள் மழையால் பாதிக்கப்படுவதுடன், 2 ஆம் போக நெல் சாகுபடியிலும் சிக்கல் ஏற்படும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

பெரியாறு அணை நிலவரம்

முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 117.10 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 1,977 கன அடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு குடிநீர் திட்டங்களுக்காக விநாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் தண்ணீர் இருப்பு 2,105 மில்லியன் கன அடி.

பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் 17 மி.மீ, தேக்கடியில் 11.2 மி.மீ, கூடலூரில் 4 மி.மீ, உத்தமபாளையத்தில் 2.4 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

கடந்த ஆண்டுகளில் பெரியாறு அணை தண்ணீர் திறப்பு விவரம்

| நாள் | அணை நீர்மட்டம் (அடியில்) | தண்ணீர் இருப்பு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 2.6.2008 | 133.10 | 5,422 |
| 28.6.2009 | 109 | 755 |
| 20.6.2010 | 110.20 | 943 |
| 15.6.2011 | 119.30 | 2,592 |
| 26.6.2012 | 111.30 | 1,118 |
| 12.6.2013 | 113 | 1,384.22 |
| 1.6.2014 | 113.80 | 1,509.50 |
| 2.6.2015 | 117 | 2,010.62 |

## ரூ.60 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ.60 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து குறைந்து, 29 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,450 முதல் ரூ.6,080 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,050 முதல் ரூ.5,350 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,300 முதல் ரூ.4,550 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.60 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகளும், வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## பட்டுக்கோட்டை விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள்

பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தஞ்சாவூர் வேளாண் இணை இயக்குநர் சி. சீனிவாசன் தலைமை வகித்து திட்ட விளக்கவுரையாற்றினார்.

விழாவை தொடங்கி வைத்துப் பேசிய பட்டுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி. சேகர், தமிழக முதல்வர் அறிவித்துள்ள குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டார விவசாயிகள் அனைவருக்கும் இடுபொருட்களை வழங்குமாறு வேளாண்மைத் துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

விழாவில் நைனாங்குளம், பில்லங்குழி, கழுகப்புலிக்காடு, பழஞ்சூர், தாமரங்கோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வீதமும், துவரங்குறிச்சி, நம்பிவயல், பழஞ்சூர், கிருஷ்ணாபுரம், த.வடகாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நெல் நுண்ணூட்டம் ஏக்கருக்கு 5 கிலோ வீதமும், பழஞ்சூர், திட்டக்குடி, முதல்சேரி

ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 8 கிலோ உளுந்து விதையும் வழங்கப்பட்டது.

மேலும், குறுவை சாகுபடித் திட்டத்தில் 4 ஏக்கர் பரப்பில் இயந்திர நடவு மேற்கொள்ளப்பட்ட கழுகுப்புலிக்காடு விவசாயி பாலமுருகனுக்கு பின்னேற்பு மானியத்திற்குரிய செயல்முறை ஆணையை வேளாண் இணை இயக்குநர் சி. சீனிவாசன் வழங்கினார்.

தென்னை வளர்ச்சி வாரிய முன்னாள் உறுப்பினர் ஏ. மலையய்யன், நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர். ஜவஹர்பாபு, பட்டுக்கோட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் பி. சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் அன்புச்செழியன், கண்ணகி கல்யாணசுந்தரம், வேளாண் அலுவலர்கள் ஆர். சாருமதி, எஸ். சங்கீதா, அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சு. சுகிதா உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்.

பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் (பொ) எஸ். வெங்கடாசலம் வரவேற்றார்.

## சம்பா சாகுபடிக்கு தயாராகும் கடைமடைப் பகுதி விவசாயிகள்

குறுவை பொய்த்துவிட்டதால் ஒரு போக சாகுபடிக்கு (சம்பா) கடைமடைப் பகுதி விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்காததால் குறுவை சாகுபடி பொய்த்து விட்டது. இதனால் காலம் தாழ்த்தி தண்ணீர் பாசனத்துக்கு கிடைப்பதால் ஒரு போக சம்பா சாகுபடியை மட்டும் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போகமும் சுமார் 20 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் மேற்கொள்வது வழக்கம். இதில் கடைமடைப் பகுதியான திருவாரூர் மாவட்டத்தில் வழக்கமான காலத்தில் காவிரியில் தண்ணீர் வந்தால் குறுவையில் 1 லட்சம் ஏக்கரும், சம்பாவில் 3 லட்சம் ஏக்கரிலும் சாகுபடி நடைபெறும்.

காவிரியில் தண்ணீர் வராத நிலையில் கடந்த சில ஆண்டுகளாக தமிழக அரசின் சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி திருவாரூர்

மாவட்டத்தில் ஆழ்குழாய் பாசனம் மூலம் 50,000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய வேளாண்துறை மூலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர், மன்னார்குடி, நன்னிலம் வட்டாரங்களில் மழை தொடங்கியதும் அதன் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்ய ஏதுவாக விளைநிலங்களை விவசாயிகள் உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். மழை வந்தாலும் ஆகஸ்ட் இறுதி அல்லது செப்டம்பர் மாதம் காவிரியில் தண்ணீர் வந்தாலும் ஒரு போக சாகுபடியாவது செய்துவிடலாம் என கருதி தற்போது வயல்கள் உழுது வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன் கூறியது: நிகழாண்டு இதுவரை காவிரியில் தண்ணீர் வராததால் வழக்கமான குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பாதிக்கக் கூடாது என்பதற்காக தமிழக அரசு குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் மூலம் குறுவை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் 50 சதவீத விவசாயிகள் வயல்களை உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். மழைக் காலம் தொடங்கியதும் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு ஒரு போக சம்பா சாகுபடியை மேற்கொள்ள உள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் உரங்கள் மாவட்ட நிர்வாகத்தால் தயாராக கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## குமரி அரசு பழப்பண்ணையில் ரூ. 1.92 லட்சத்துக்கு மாங்காய் ஏலம்

கன்னியாகுமரி அரசு பழப்பண்ணையில் மாங்காய் ஏலம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் ரூ. 1.92 லட்சத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

கன்னியாகுமரி அரசு பழப்பண்ணையில் விளைச்சலாகும் மாங்காய்கள் ஆண்டுக்கு இருமுறை ஏலம் விடப்படுவது வழக்கம். இந்நிலையில், நிகழாண்டு மெயின் சீசனை முன்னிட்டு கடந்த ஜூன் 24ஆம் தேதி ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அரசு நிர்ணயித்ததைவிட குறைவான தொகைக்கு வியாபாரிகள் ஏலம் கேட்டதால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது. இதையடுத்து ஜூலை 4ஆம் தேதி ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஒருவர் மட்டுமே டெண்டர் கொடுத்திருந்ததால் இரண்டாவது முறையாக ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது முறையாக திங்கள்கிழமை (ஜூலை 11) நடைபெற்ற ஏலத்தில் 10-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். இதில், அதிகபட்சமாக ரூ. 1.92 ஆயிரத்து 222-க்கு டெண்டர் வைத்திருந்த அகஸ்தீசுவரத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாசன் என்ற வியாபாரிக்கு மாங்காய் உரிமம் வழங்கப்பட்டது.

ஏலத்தில் நாகர்கோவில் தோட்டக்கலை துணை இயக்குநர் எம். அசோக் மேக்ரின், உதவி இயக்குநர் ஒய். ஷீலாஜான், அகஸ்தீசுவரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் அப்பல்லோஸ், குமரி அரசு பழப்பண்ணை அலுவலர் எஸ்.என். தீலீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருவமழை தரும் பாலக்காட்டு கணவாய்

ஜூன் முதல் செப்டம்பர் வரை தமிழகத்தில் மழை பெய்வதற்கு காரணமான மேகங்களை மேற்குத் தொடர்ச்சி மலை தடுத்து விடுகிறது. இதனால் தமிழகம் மழை மறைவுப் பிரதேசம் ஆகின்றது.எனினும் பாலக்காட்டு கணவாய் வழியே தப்பும் மேகங்கள் ஓரளவு மழையைத் தருகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையின் முக்கிய கணவாய் பாலக்காட்டு கணவாய். கடல் மட்டத்தில் இருந்து இதன் உயரம் 144 மீ. இரு பக்கங்களிலும் சுமார் 1500 முதல் 2 ஆயிரம் மீட்டர் உயரம் வரை மலைகள் உள்ளன.

## 5 லட்சம் டன் மக்காச்சோளம் இறக்குமதிக்கு முயற்சி: மேலும் விலை உயராமல் இருக்க வாய்ப்பு

ஈரோடு: "வெளிநாடுகளில் இருந்து, 5 லட்சம் டன் மக்காச்சோளம் இறக்குமதி செய்ய, மத்திய அரசு மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது," என, ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (ஸ்பேக்) நிர்வாகக்குழு உறுப்பினர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது: மக்காச்சோளத்தை மூலப்பொருளாக கொண்டு, கோழித்தீவனம், மாட்டுத்தீவனம் மற்றும் ஸ்டார்ச் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. தற்போது நிலவி வரும் மக்காச்சோளம் தட்டுப்பாட்டால், இத்தொழிற்சாலைகள் கடும் சவாலை எதிர் நோக்கி உள்ளன. இந்த தட்டுப்பாட்டால், மக்காச்சோளத்தின் விலை குவிண்டால், 1,850 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது. மேலும், காரீப் பருவ கால மழை பொய்த்ததாலும், வெளிநாட்டு கம்பெனிகள் உள்நாட்டு குடோனில் இருப்பு வைத்துள்ளதாலும், விலை ஏற்றத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. இச்சூழலில், அகில இந்திய ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் சப்தனா, மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனை சந்தித்து, ஸ்டார்ச் உற்பத்தியாளர்களுக்கு, 5 லட்சம் டன் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய, அனுமதி கேட்டபோது, பரிசீலனை செய்வதாக தெரிவித்துள்ளார்

உலக அளவில் அமெரிக்கா போன்ற நாடுகளில், மக்காச்சோள சாகுபடி பரப்பளவு அதிக அளவில் உள்ளதால், அங்கிருந்து இறக்குமதி செய்வதால், மேலும் விலை உயர்வது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு கம்பெனிகள் இருப்பு வைத்துள்ள சோளத்தை விற்பனைக்கு கொண்டு வர வாய்ப்பு இருப்பதால், மக்காச்சோள விலை மேலும் உயர வாய்ப்பு இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: நீர்மட்டம் 55 அடியாக உயர்வு

பவானிசாகர்: நீலகிரி மலைப்பகுதிகளில், தொடர்ந்து பெய்து வரும் மழையால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பெய்யும் மழை காரணமாக வரும் தண்ணீரே, அணைக்கு பிரதான நீர் வரத்தாகும். இரண்டு வாரங்களுக்கு முன், நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்தது. தொடர்ந்து பெய்த மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. பில்லூர் அணையிலிருந்து, பவானி ஆற்றில் அதிகளவு நீர் திறந்து விடப்பட்டதால், 42.64 அடியாக இருந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம், கடந்த, 1ம் தேதி, 4 அடி உயர்ந்து நீர்மட்டம், 50 அடியை தொட்டது. நேற்று முன்தினம் காலை, 761 கன அடியாக இருந்த நீர்வரத்து, மாலை, 2,467 கன அடியாக அதிகரித்து, அணையின் நீர்மட்டம், 54 அடியாக இருந்தது. நேற்று காலை, 2,049 கன அடியாக இருந்த நீர்வரத்து, மாலை, 6 மணி நிலவரப்படி, 4,500 கன அடியாக அதிகரித்தது. அதே சமயம் அணையின் நீர்மட்டம், 55 அடியாக உயர்ந்தது. குடிநீர் தேவைகளுக்காக, பவானி ஆற்றில், 200 கன அடியும், கீழ்பவானி வாய்க்காலில், 5 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளது. நீர் இருப்பு, 5.5 டி.எம்.சி.,யாக உள்ளது.

## நம்பியூரில் ஒரே பிரசவத்தில் இரு கன்றுகளை ஈன்ற பசுமாடு

கோபி: நம்பியூர் அருகே, ஒரே பிரசவத்தில் பசுமாடு, இரு கன்றுகளை ஈன்றது. ஈரோடு மாவட்டம், நம்பியூர் அருகே கடமசெட்டிபாளையத்தை சேர்ந்தவர் குழந்தையம்மாள், 45. விவசாயி. இவர் சிந்துமாடு வளர்த்து வருகிறார். கருவுற்றிருந்த சிந்து மாடு நேற்று காலை, ஒரு ஆண் கன்று, பெண் கன்று என, சுக பிரசவத்தில் ஈன்றது. தாய் மாடும், இரு கன்றுகளும் நன்றாக உள்ளது. இரு

கன்றுகள் ஈன்ற பசுமாட்டை, அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

### தேயிலை ஏலத்தில்83 சதவீதம் விற்பனை

குன்னூர்,குன்னூரில்நடந்த தேயிலை ஏலத்தில், 83 சதவீதம் விற்பனை யானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில், விற்பனை எண், 27க்கான ஏலம் நடந்தது. இதில், 15 லட்சத்து, 96 ஆயிரம் கிலோ தேயிலை துாள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 10 லட்சத்து, 46 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 5 லட்சத்து, 50 ஆயிரம் கிலோவும் இருந்தது. 83 சதவீதம் விற்பனையானது. கடந்த ஏலத்தை விட, ஒரு ரூபாய் விலை குறைந்தது. உயர்ந்தபட்ச விலையாக, சி.டி.சி., ரகம் கிலோ ஒன்றுக்கு,185 ரூபாய், ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 281 ரூபாயும் கிடைத்தது. சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை தேயிலை துாள், 82 ரூபாய் முதல், 84 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 100 ரூபாயில் இருந்து, 130 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை, 90 ரூபாயில் இருந்து, 91 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது. இதன் மதிப்பு, 12 கோடியே 69 லட்சம் ரூபாய் ஆகும்.

'விண்டிகேப்' சாலையில்
முட்புதர் ஆக்கிரமிப்பு

----கோத்தகிரி, ஜூலை 12--

கோத்தகிரி 'விண்டிகேப்' சாலையின் இருப்புறங்களிலும் ஆக்கிரமித்துள்ள காட்டு செடிகள் அகற்றாததால், சாலையின் அகலம் குறைந்துள்ளது.

கோத்தகிரி கிளப்ரோடு - கே. எம்.எப்., சாலை யை இணைக்கும் குறுக்கு சாலையில் விண்டிகேப் சாலை அமைந்துள்ளது. சுமார் ஒரு கி.மீ., தொலைவில் அமைந்துள்ள இச்சாலையின் இருப்புறங்களிலும், காட்டுச் செடிகள் ஆக்கிரமித்துள்ளதால், சாலையின் அகலம் குறைந்துள்ளது. வளைவுகளில், எதிரில் வரும் வாகனங்கள் தெரிவதில்லை. இதனால், அடிக்கடி விபத்து நடக்கிறது.

மேலும், புதர் சூழ்ந்த இச்சாலையில், கரடி, காட்டெருமை மற்றும் சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. கடந்த சில

நாட்களுக்கு முன், நடைப் பயிற்சி மேற்கொண்ட ஒருவரை, காட்டெருமை தாக்கி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எனவே, இக்குறிப்பிட்ட சாலையின் இருப்புறங்களிலும் உள்ள காட்டு செடிகளை அகற்ற, சம்மந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## தேயிலை ஏலத்தில்83 சதவீதம் விற்பனை

குன்னூர்,குன்னூரில்நடந்த தேயிலை ஏலத்தில், 83 சதவீதம் விற்பனை யானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில், விற்பனை எண், 27க்கான ஏலம் நடந்தது. இதில், 15 லட்சத்து, 96 ஆயிரம் கிலோ தேயிலை துாள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 10 லட்சத்து, 46 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 5 லட்சத்து, 50 ஆயிரம் கிலோவும் இருந்தது. 83 சதவீதம் விற்பனையானது. கடந்த ஏலத்தை விட, ஒரு ரூபாய் விலை குறைந்தது. உயர்ந்தபட்ச விலையாக, சி.டி.சி., ரகம் கிலோ ஒன்றுக்கு,185 ரூபாய், ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 281 ரூபாயும் கிடைத்தது. சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை தேயிலை துாள், 82 ரூபாய் முதல், 84 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 100 ரூபாயில் இருந்து, 130 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை, 90 ரூபாயில் இருந்து, 91 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது. இதன் மதிப்பு, 12 கோடியே 69 லட்சம் ரூபாய் ஆகும்.

'விண்டிகேப்' சாலையில்
முட்புதர் ஆக்கிரமிப்பு

----கோத்தகிரி, ஜுலை 12--

கோத்தகிரி 'விண்டிகேப்' சாலையின் இருப்புறங்களிலும் ஆக்கிரமித்துள்ள காட்டு செடிகள் அகற்றாததால், சாலையின் அகலம் குறைந்துள்ளது.

கோத்தகிரி கிளப்ரோடு - கே. எம்.எப்., சாலை யை இணைக்கும் குறுக்கு சாலையில் விண்டிகேப் சாலை அமைந்துள்ளது. சுமார் ஒரு கி.மீ., தொலைவில் அமைந்துள்ள இச்சாலையின் இருப்புறங்களிலும், காட்டுச் செடிகள் ஆக்கிரமித்துள்ளதால், சாலையின் அகலம் குறைந்துள்ளது. வளைவுகளில், எதிரில் வரும் வாகனங்கள் தெரிவதில்லை. இதனால், அடிக்கடி விபத்து நடக்கிறது.

மேலும், புதர் சூழ்ந்த இச்சாலையில், கரடி, காட்டெருமை மற்றும் சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன், நடைப் பயிற்சி மேற்கொண்ட ஒருவரை, காட்டெருமை தாக்கி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எனவே, இக்குறிப்பிட்ட சாலையின் இருப்புறங்களிலும் உள்ள காட்டு செடிகளை அகற்ற, சம்மந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## ஜூலை 19, 20ம் தேதிகளில் செம்மறியாடு வளர்ப்பு பயிற்சி

கரூர்: கரூர், கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும், 19, 20ம் தேதிகளில், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி நடக்கிறது.

இதுகுறித்து, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வசந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: கரூர் அடுத்த, பண்டுகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும், 19, 20ம் தேதிகளில், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி நடக்கிறது. இதில், அறிவியல் ரீதியான ஆட்டினங்கள் தேர்வு செய்தல், இனப்பெருக்கம், பரண் மேல் கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, பசுந்தீவன உற்பத்தி, மேய்ச்சல் தரை அமைப்பு, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி வழங்கப்பட உள்ளது. வரும், 25ம் தேதி முதல், 30ம் தேதி வரை லாபகரமான கறவை மாடு வளர்ப்பு குறித்து ஆறு நாட்கள் பயிற்சி நடக்கிறது. பயிற்சியில், வங்கி கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு, பண்ணைப் பொருளாதாரம், பசுந்தீவன உற்பத்தி, பதப்படுத்துதல், கலப்பு தீவனம் தயாரித்தல் உள்ளிட்டவை குறித்து பயிற்சி வழங்கப்படும். இதில், கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சி மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 5,936 கனஅடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 5,936 கனஅடியாக அதிகரித்தது. இரு நாட்களாக, கர்நாடகாவின், கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து, பாசனத்துக்காக காவிரியாற்றில் வினாடிக்கு, 7,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. கூடுதல் நீர்திறப்பால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 5,159 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 5,936 கனஅடியாக அதிகரித்தது. நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 45.72 அடியாகவும், நீர்இருப்பு, 15.22 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 2,000 கனஅடி நீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது.

## பண்ணை குட்டை அமைக்க விவசாயிகள் வேண்டுகோள்

கீழக்கரை: கோடைகாலங்களில் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வசதியாக பட்டா நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைத்து தர வேளாண்மைத்துறை முன்வரவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து பள்ளமோர்க்குளம் விவசாயி தங்கராஜ் கூறுகையில்,“ கொம்பூதி, களரி, சுமைதாங்கி, சீத்தை, பள்ளமோர்க்குளம் உள்ளிட்ட கிராமங்களின் வயல்வெளிகளில் மிளகாய், எள், நெல் உள்ளிட்ட பணப்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன.

கோடையில் தண்ணீர் பற்றாக்குறையினால் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகிறது. இதை தவிர்க்கும் விதமாக விவசாயிகளின் நிலங்களில் அரசு மானியத்துடன் பண்ணை குட்டைகள் அமைத்துதர வேளாண்மைத்துறை முன்வரவேண்டும். இதனை மாவட்ட நிர்வாகமும் ஊக்குவிக்கவேண்டும்,” என்றார்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நிலக்கடலையில் ஊடுபயிராக பயறுவகை பயிர்கள் சாகுபடி

மயிலம், : மயிலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர் வெளியிட்டுள்ள அறிக்கை:விழுப்புரம் மாவட்டத்தில் ஆடிப்பட்டம் மானாவாரி நிலக்கடலை சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது. சாதாரண முறையில் நிலக்கடலை விதைப்பு செய்வதால் சரியான இடைவெளியில் சீராக விதைப்பு பணி மேற்கொள்ள இயலாது. இதனால் சில இடங்களில் செடிகள் அடர்த்தியாகவும், சில இடங்களில் அதிக இடைவெளியிலும் இருக்கும். காய்கள் பிடிக்கும் திறன் சீராக இல்லாமல் மகசூல் குறைவதற்கு வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க தற்போது டிராக்டர் மூலம் இயக்கப்படும் நிலக்கடலை விதைப்பு இயந்திரம் உள்ளது. இந்த இயந்திரத்தை பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 ஏக்கர் வரை விதைப்பு செய்யலாம்.

இயந்திரம் மூலம் விதைப்பு செய்வதால் சதுர மீட்டருக்கு 33 செடிகள் இருக்கும் வண்ணம் சரியான இடைவெளியில் விதைக்க முடியும். இதனால் செடிகளில் பக்கக்கிளைகள் கூடுதலாக உருவாக வாய்ப்பு உள்ளது. பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் திறன் அதிகரிக்கும்.மேலும் ஊடுபயிராக 6 முதல் 8 அடி இடைவெளியில் துவரை, உளுந்து, பச்சைப்பயிறு அல்லது தட்டைப்பயிறு விதைப்பு செய்து கூடுதல் லாபம் பெறலாம்.

இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நிலக்கடலையில் ஊடுபயிராக பயறுவகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.400 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட உள்ளது. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் பரப்பிற்கு ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.

இம்மானியத்தொகை பெற விரும்பும் விவசாயிகள் நில உரிமைக்கான சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், விதைப்பு செய்வதற்கான புகைப்படம் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அந்த அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

## வரத்து அதிகரிப்பால் தேங்காய் எண்ணெய் டின்னுக்கு ரூ.200 விலை சரிவு

சேலம் : தேங்காய் விளைச்சல் அதிகரிப்பால் தேங்காய் எண்ணெய் விலை சரிந்து வருகிறது. 15 கிலோ எடை கொண்ட டின்னுக்கு ரூ.200 விலை குறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் பல்லாயிரம் தென்னை மரங்கள் பட்டுப்போயின. இதனால் எண்ணெய் உற்பத்தி குறைந்து, விலை உயர்ந்தது. இந்நிலையில் கடந்தாண்டு பெய்த பருவமழையால், தென்னை மரங்கள் நல்ல நிலையில் வளர்ந்துள்ளது. இதன் காரணமாக தென்னை மரங்களில் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் கொப்பரை தேங்காய் விலை குறைந்துள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்கு வழக்கத்தை விட கொப்பரை வரத்து அதிகரிப்பால், எண்ணெய் பிரித்து எடுக்கும் பணி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு தேங்காய் எண்ணெய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை சரிந்து வருகிறது. இது குறித்து சேலம் செவ்வாய்பேட்டை மொத்த எண்ணெய் வியாபாரிகள் கூறுகையில்,'' தேங்காய் விளைச்சல் அதிகரிப்பால், மார்க்கெட்டுக்கு தேங்காய் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த இரு மாதத்திற்கு முன்பு ரூ.2 ஆயிரம் என விற்பனை செய்யப்பட்ட 15 கிலோ எடை கொண்ட தேங்காய் எண்ணெய் டின் ரூ.200 சரிந்து, ரூ.1800 என விற்பனை செய்யப்படுகிறது,'' என்றனர்.

## வ.உ.சி., மார்க்கெட்டில் பூக்களின் விலை உயர்வு

சேலம் : சேலம் மாவட்டம் முழுவதும் பரவலாக பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு பறிக்கப்படும் பூக்கள் விற்பனைக்காக சேலம் வ.உ.சி., மார்க்கெட்டில் விவசாயிகள் கொண்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக முகூர்த்தம், விசேஷம் எதுவும் இல்லாததால் பூக்களின் விலை சரிந்து இருந்தது. இந்நிலையில் நேற்று முகூர்த்தம், இன்று காலை சேலம் ராஜகணபதி கோயிலில் கோடி அர்ச்சனை நிறைவு விழா மற்றும் முகூர்த்தம் காரணமாக பூக்களின் விலை

உயர்ந்துள்ளது.

இது குறித்து வ.உ.சி., பூ மார்க்கெட் வியாபாரி மோகன் கூறுகையில்,'' முகூர்த்தம் மற்றும் கோயில் விசேஷம் காரணமாக பூக்களின் விலை உயர்ந்துள்ளது. கடந்த 8ம் தேதி ரூ.200க்கு விற்ற ஒரு கிலோ குண்டுமல்லி, நேற்று நிலவரப்படி ரூ.400 என விலை உயர்ந்துள்ளது. ரூ.200க்கு விற்ற கனகாம்பரம் ரூ.500 எனவும், சாமந்தி ரூ.150 எனவும், செண்டி பூ ரூ.100 எனவும், ஸ்டார் ரோஸ் ரூ.150 எனவும், அரளி ரூ.150 எனவும், ஒரு தாமரை பூ ரூ.15 எனவும், சம்பங்கி ரூ.150 எனவும், ஊசிமல்லி ரூ.240 எனவும், ஜாதிமல்லி ரூ.400 எனவும்,. பட்டன்ரோஸ் ரூ.200 என விலை உயர்ந்துள்ளது,'' என்றனர்.

## பெரம்பலூரில் பாலிஹவுஸ் அமைத்து செவ்வந்திப்பூ சாகுபடி 2 விவசாயிகள் அசத்தல்

பெரம்பலூர், : பெரம்பலூரில் 2 விவசாயிகள் பாலி ஹவுஸ் அமைத்து செவ்வந்திப்பூ சாகுபடி செய்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம் மானாவாரிப் பயிர்களைச் சாகுபடி செய்கிற பூமியாகும். கிணற்றுப் பாசனத்தையே பெரிதும்நம்பியுள்ள இப்பகுதியில் மக்காச்சோளம், பருத்தி, சின்னவெங்காயம் மட்டுமே பெருமளவு சாகுபடி செய்யப்படுகிறது. இதனைத் தாண்டி தோட்டக்கலைப் பயிர்களான தக்காளி, பூக்கள், காய்கறி சாகுபடியென்பது, குறிப்பிட்ட சில ஊர்களில் குறு விவசாயிகள் மட்டுமே செய்கின்றனர்.

இதற்கிடையே அனுக்கூர், குரும்பலூரை சேர்ந்த விவசாயிகள் இருவர் தோட்டக்கலைத்துறை உதவியுடன், நவீனத் தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தி காய்கறி, பூக்கள் சாகுபடியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். இதில்ம குரும்பலூரைச் சேர்ந்த பாலுசாமி மகனான குமார் என்பவர் தன துவயலில் செவ்வந்திப்பூ சாகுபடியை நவீன தொழில்நுட்ப உதவியுடன் செய்து அசத்தி வருகிறார்.

6ம்வகுப்பு மட்டுமே படித்துள்ள குமார், தனதுஅப்பா செய்துவந்த விவசாயத் தொழிலைத்தான் தொடர்ந்து வருகிறார். இருந்தும் பழைய முறைகளை கைவிட்டு நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு வருகிறார். இதற்காக கிருஷ்ணகிரி,

கோவை, ஈரோடு மாவட்டங்களுக்கு நேரில்சென்று முன்னோடி விவசாயிகளின் சாகுபடி தொழில் நுட்பங்களை, நுணுக்கங்களை பார்த்து உள்வாங்கியுள்ளார். பிறகு தனக்கிருக்கும் வயல்பரப்பில் பாலித்தீன்ஷீட்டால் அமைக்கப்படும் பிரமாண்ட பாலிஹவுஸ் அமைத்து செவ்வந்திப்பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ளார்.

இதற்காக குமாருக்கு பெரம்பலூர் தோட்டக்கலைத்துறையினர் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2015- 2016 திட்டத்தின்கீழ் ரூ19.21லட்சத்தில் பாலிஹவுஸ் அமைக்க, ரூ 8.90லட்சம் மானியமாக வழங்கப்படுமென தெரிவித்துள்ளனர். ஏறக்குறைய 50 சதவீத மானியம் கிடைப்பதால் நம்பிக்கையுடன் தனது 2ஆயிரம் சதுரமீட்டர் வயல்பரப்பில், பாலிஹவுஸ்அமைத்து, அதனுள் செவ்வந்திப்பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ளார். களைகளின்றி அடர்ந்துவளர்வதே இதன்சிறப்பாகும். வயல்பரப்பா இல்லை நவீன தொழிற்சாலையா என அதிசயிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட செட்டிற்குள், சொட்டுநீர்ப் பாசன வசதி, பாகர் எனப் படும் நீரால் குளிராக்கும் குளிர்சாதனவசதியை அமைத்துள்ளார்.

இதனால் மூடப்பட்ட பந்தலுக்குள் சாரல்மழை தூவிக்கொண்டிருக்கும். அதேபோல் தேவையான அளவுக்கு சூரியவெப்பம், தேவையானஅளவுக்கு காற்றோட்டம், தேவையான அளவுக்கு நீரோட் டம் என்றத் தத்துவத்தில் பூக்கள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளார். பெரம்பலூர் மாவட்டத்தில் அனுக்கூரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்ற இளம் விவசாயியும், குரும்பலூர் குமாரும் மட்டுமே இந்த நவீன தொழில்நுட்பத்தை பெரம்ப லூர் மாவட்டத்தில் துணிச்சலாக புகுத்தி சாகுபடியில் இறங்கியுள்ளனர். 3ஆண்டு பயிரான செவ்வந்திப்பூக்கள் 90-100நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும். தற்போது 80 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் 10நாட்களில் செவ்வந்திப் பூக்கள் அறு வடை செய்யப்பட உள்ளது.

இதுகுறித்து குமார் கூறும்போது, இங்கு அறுவடைசெய்யப்படும் பூக்கள் திருச்சி, ஸ்ரீரங்கத்திற்கு கொண்டு சென்று விற்கப்படவுள்ளது. முதலாமாண்டு முடிந்தவுடன் பூக்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. 50 செண்டில் கிழக்குமேற்காக 56மீட்டர், தெற்குவடக் காக 36மீட்டர் எனமொத்தம் 2016மீட்டர் பரப்பளவில் செவ்வந்திப்பூ சாகுபடி செய்து வருகிறேன். பாலிஹவுஸ்

5 வருடங்களுக்கு தாங்குமென்பதால் இதே தொழில்நுட்பத் தைக் கையாளவுள்ளேன். இதனால் பூச்சித்தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது என்றார்.

தேவை அதிகரிப்பு

நவீன தொழில்நுட்பத்தின்கீழ் உழுவதற்கு, பயிர்நடுவதற்கு டிராக்டரும், அறுவடைக்கு கதிரடிக்கும் இயந்திரமும் வந்துவிட்டது. இருந்தும் களையெடுத்தல், பூச்சித் தாக்குதல், தண்ணீர்சிக்கனம் போன்றப் பிரச்சனைகளை சமாளிக்க முடியாமல் பல நூறு விவசாயிகள் தவித்து வருகின்றனர். இதற்கு பாலிஹவுஸ் மிகுந்த பயனளிக்கும் என்பதால் மாவட்டஅளவில் இந்தத் தொழில்நுட்பத்திற்கு விரைவில் தேவைகள் அதி கரிக்கும் என தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## அதிக மண்புழு உரத்திற்கு சில்பாலின் பையே சிறந்தது வேளாண்துறை அட்வைஸ்

திண்டுக்கல், : சில்பாலின் பைகளில் மண்புழு உரத்தை எளிதாக தயாரித்து சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: ‘‘மண்புழு என்பது இயற்கையின் மிகப்பெரிய சக்திகளில் ஒன்றாக உள்ளது. மேல் மண் படலத்தை வைத்திருக்கவும், அதற்கு புத்துயிரூட்டவும் மண்புழுவையே இயற்கையானது பயன்படுத்தி கொள்கிறது. மண்புழுவில் எபிஜியிக் புழுக்கள், எண்டோஜியிக் புழுக்கள், அனிசிக் புழுக்கள் என 3 வகை உள்ளன.

மண்புழு உரம் அதிக அளவில் விற்பனைக்கு இருந்தாலும் அதன் அதிகபடியான விலையால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதை வாங்கி பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. ஆனால் சில்பாலின் பைகள் மூலம் மண்புழு உரம் தயாரிக்கும் முறை அனைத்து விவசாயிகளையும் எளிதாக்கி விடுகிறது.

இதன்மூலம் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் இருந்து கிடைக்கும் இயற்கைக் கழிவுகளையும், மண்புழுக்களையும் கொண்டு தங்கள் இடத்திலேயே மண்புழு உரத்தை தயாரிக்கலாம். சில்பாலின் தொட்டி அமைக்க 250 ஜீ.எஸ்.எம் அளவிலான கனத்தை கொண்ட சில்பாலின் பை தேவை. இது 4 கிலோ எடையாக இருக்க வேண்டும்.

இதற்கு ஒரு அங்குலம் கனம் கொண்ட குழாய் அல்லது மூங்கில் சவுக்கு குச்சிகள் தேவைப்படும். சில்பாலின் தொட்டியின் அடிப்பகுதியில் தேங்காய் நார் அரை அடி உயரத்திற்கு இருக்குமாறு நிரப்ப வேண்டும்.

இதில் தகுந்த அளவு ஈரப்பதம் உள்ளவாறு நீரினை தெளிக்க வேண்டும். இப்பையை மேல் புறத்தில் நிழல் வலை கொண்டு மூட வேண்டும்.அறுவடை செய்யப்பட்ட மண்புழு உரத்தை இருட்டான அறையில் 40 சதவீத ஈரப்பதத்தில் சூரிய ஒளி படாதவாறு வைக்க வேண்டும். மண்புழு உரத்தை உற்பத்தி செய்து அவற்றைப் பயன்படுத்துவதுதான் சிறு மற்றும் குறு விவசாயிகளின் உற்பத்தி திறன் குறைவிற்கு ஒரு மாற்று வழியாகும். இதன்மூலம் 25 சதவீதம் ரசாயன உரச் செலவு குறைந்து அதிக உற்பத்தியையும் கிடைக்கும்'' இவ்வாறு தெரிவித்தனர்.

## தரமான பயறு விதை உற்பத்தி செய்ய வேண்டுமா? வழிகாட்டுகிறது வேளாண்துறை

பழநி, : தரமான பயறு வகை விதை உற்பத்தி செய்வதற்கு வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

குறைந்த நீர்த்தேவை உள்ள குறுகிய கால விவசாயத்திற்கு பயறு வகை விவசாயம் ஏற்றது. துவரை, உளுந்து, தட்டை மற்றும் பாசிப்பயறு போன்றவை பயறு வகை விவசாயத்தை சேர்ந்தவை. பயறு வகை விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களது நிலத்தை நன்கு புழுதியாகும் வரை நன்றாக உழ வேண்டும். கடைசி உழவின்போது 1 ஹெக்டேருக்கு 12.5 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். வேளாண்துறையினரால் சான்றளிக்கப்பட்ட ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். விதை அளவு மற்றும் இடைவெளிகள் வேளாண்துறையினர் அறிவுறுத்தியபடி இருக்க வேண்டும்.

விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 2 கிராம் கார்பன்டைசிம் என்ற அளவில் கலக்க வேண்டும். கலந்த 24 மணி நேரத்திற்கு பிறகு 1 ஹெக்டேருக்கு தேவையான 3 பொட்டலம் ரைசோபியத்தை நன்றாக கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். விதையை கடினப்படுத்துவதால் முளைப்புத்திறன் மற்றும் வீறியத்தன்மை அதிகரிக்கின்றது. வறட்சி, அதிக வெப்பம் மற்றும் உவர் மண்ணின் தீமையைத் தாங்கும் திறன் அதிகரிக்கின்றது. பயிர்களில் நீர் சேமிக்கும் தன்மை

அதிகரிக்கின்றது. எனவே, விதையை கடினப்படுத்தி, விதை முலாம் பூச வேண்டும்.

ெஹக்டேருக்கு 5 கிலோ பயறு வகைகளுக்கான நுண்சத்தினை அடியுரமாக இட வேண்டும். 1 ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 3 பொட்டலம் ரைசோபியம், 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். ஹெக்டேருக்கு 10 பொட்டலம் ரைசோபியம் (பயறு) மற்றும் 10 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். மானாவாரியில் ஹெக்டேருக்கு 12.5:25:12-.5 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் இட வேண்டும். இறவையில் ஹெக்டேருக்கு 50:25:25 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் இட வேண்டும். ஹெக்டேருக்கு 110 கிலோ ஜிப்சம் இடுவதால் காய்கள் திரட்சியாக இருக்கும். பென்டிமெதிலின் களைக்கொல்லி ஹெக்டேருக்கு 2 லிட்டர் வீதம் 900 லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைத்த 3 நாட்களுக்குள் ஈரம் உள்ளபோது தெளிக்க வேண்டும்.

விதைத்த 5ம் நாள் முளைக்காத இடங்களில் ஊறவைத்த விதையை இடைநிறைவு செய்ய வேண்டும். வேளாண்துறையினர் வழிகாட்டுதலுடன்படி இலை வழியாக உரமிடுதல் மற்றும் டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும். பூச்சிநோய் தாக்குதல், நுண்ணுட்டச்சத்து பற்றாக்குறை, கடுமையான வறட்சி, அதிகமான ஈரப்பதம் போன்ற காரணங்களால் பயறு வகைகளில் பூக்கள் உதிர்கின்றன. இதனால் மகசூல் பெருமளவு பாதிக்கப்படுகின்றன.

இதனை பயிர் ஊக்கியான நாப்தலின் அசிடிக் ஆசிட் கொண்டு கட்டுப்படுத்தலாம். பயிர் ஊக்கியினை தெளிக்க சுத்தமான தண்ணீரை உபயோகிக்க வேண்டும். வளர்ச்சிநிலை, பூக்கும் நிலை மற்றும் காய்பிடிக்கும் நிலைகளில் நீர் பாய்ச்சுதல் செய்ய வேண்டும். பயறு வகைகளில் இளம்பருவம், வளரும் பருவம் மற்றும் பூக்கும் பருவங்களில் ஏற்படும் நோய்களையும், சாம்பல் நோய் மற்றும் துருநோய்களுக்கான மருந்துகளை வேளாண்துறையினர் வழிகாட்டுதலுடன் கலந்து தெளிக்க வேண்டும். 80% காய்கள் நன்கு முற்றயவுடன் அறுவடை செய்ய வேண்டும். பிரித்த விதைகளை நன்கு காயவைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு 10 மில்லி என்ற அளவில் ஏதாவது 1 தாவர எண்ணெய்யுடன் கலந்து சேமித்திட வேண்டும். இவ்வாறு செய்வதால் வண்டுகள் பயிரின் மீது

முட்டையிடுவதை குறைக்கலாம். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**சீனியவரைக்காய் விளைச்சலும் அதிகம்; விலையும் அதிகம் விவசாயிகள் மகிழ்ச்சி**

தேனி, : தேனி பகுதியில் சீனியவரைக்காய் விளைச்சல் அதிகரித்ததோடு கொள்முதல் விலையும் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி சுற்றுவட்டார கிராமங்களான வெங்கடாசலபுரம், தப்புக்குண்டு, தாடிச்சேரி, ஸ்ரீரெங்காபுரம், காமாட்சிபுரம் உள்ளிட்ட கிராமங்களில் மானாவாரி பயிராகவும், கிணற்று பாசன பயிராகவும் சீனியவரைக்காய் பயிரிடப்படுகிறது. குறைந்த அளவு தண்ணீரில் 40 நாள் பயிராக விளையக்கூடிய இப்பயிரானது விவசாயிகளுக்கு பல நேரங்களில் ஊடுபயிராகவும் இருந்து மகசூலை அளித்து வருகிறது.

தற்போது, இப்பகுதியில் அவ்வப்போது பெய்யக்கூடிய சாரல் மழையாலும், கிணற்று பாசனத்தாலும் சீனியவரைக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.20 வரை விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி செல்வராஜ் கூறும்போது, குறைந்தகால மகசூல் பயிரான சீனியவரைக்காய் பயிரிட ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ.15 ஆயிரம் வரை செலவாகிறது.

கடந்த வாரம் வரை கிலோ ஒன்றுக்கு ரூ.5க்கு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட சீனியவரைக்காய் தற்போது, கிலோ ரூ.20 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது இப்பகுதியில் பெய்யும் சாரல் மழை மற்றும் நல்ல சீதோஷ்ண நிலையால் மகசூல் அதிகரித்துள்ளது. ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் 2 ஆயிரம் கிலோ முதல் 3 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் கிடைத்துள்ளது. தற்போது கிடைத்து வரும் கொள்முதல் விலையால் மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

## வேப்ப எண்ணெய் ஏன் கசக்கிறது...?

வேப்ப எண்ணெய் வேப்பங்கொட்டையில் இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண்ணெய் ஆகும். கோடையில் வேம்புகளில் பூக்கும் பூக்களில் இருந்து காய்கள் உருவாகி பழங்களாக மாறும். உதிர்ந்த பழங்கள் உலர்த்தப்பட்டு அதில் இருந்து விதை எடுக்கப்படுகிறது. இவற்றை அரைத்தால் எண்ணெய் கிடைக்கும். இது ஒருவித மணமும், கசப்புத்தன்மையும் கொண்டது. ஆனால் மருத்துவ குணம் மிக்கது ஆகும். விதைகளை அரைத்தபின்பு கிடைக்கும் சக்கை வேப்பம்புண்ணாக்கு எனப்படும். இது ஒரு சிறந்த உரமாகவும், பூச்சிக்கொல்லியாகவும் பயன்படுகிறது.

வேப்பஎண்ணெய் பொதுவாக சிவப்பு நிறமாக இருக்கும். நிலக்கடலை, பூண்டு ஆகியவை இணைந்த ஒரு மணத்தைக் கொண்டிருக்கும்.இது பெரும்பாலும் டிரைகிளிசரைடுகள், டிரிட்டர்பெனாய்டு ஆகியவற்றின் சேர்வையைக் கொண்டிருக்கும். இதுவே இதன் கசப்புத்தன்மைக்கு காரணமாகும்.வேப்பஎண்ணெய் பொதுவாக சமையலில் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் இதில் உள்ள மருத்துவகுணங்கள் காரணமாக மருந்தாகவும் ஒப்பனைப்பொருட்களாகவும், சோப் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. சேமிக்கப்டும் விதைகளை பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்கவும் பயன்படும்.

வேப்பஎண்ணெய் முகப்பருவைக் குறைக்கும்.வேப்பஎண்ணெயில் எவ்வித பக்கவிளைவும் இல்லை. பயனுள்ள பல்வேறு இயல்புகள் இதில் அதிகம் உள்ளன. இருப்பினும் செறிவுகூடிய நிலையிலே இவை பயன்படுத்தப்படுகிறது.

## கீழக்கரையில் பசுமை திட்டத்தில் 200 மரக்கன்று நடவு

கீழக்கரை, - பசுமை கீழக்கரை திட்டத்தின் கீழ் நகரில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடந்தது. ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் பசுமையை போற்றும் வகையில் கருவேல மரங்களை அகற்றவும், ஆயிரக்கணக்கான மரங்களை நட்டு பராமரிக்கவும் கீழக்கரையை சேர்ந்த சமூகநல ஆர்வலர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இளைஞர்கள் இணைந்து முயற்சி மேற்கொண்டனர்.

இதற்கான ஆலோசனை கூட்டம் பல கட்டங்களாக நடந்தது. கீழக்கரை இஸ்லாமிய பள்ளி வளாகத்தில் பசுமை கீழக்கரை திட்ட தொடக்க நிகழ்ச்சி கடந்த

சில நாட்களுக்கு முன் நடந்தது. இதன் தொடர்ச்சியாக நேற்று கீழக்கரை அரசு மருத்துவமனை, சிஎஸ்ஐ சர்ச், கடற்கரை பகுதி, போலீஸ் ஸ்டேஷன், இஸ்லாமிய பள்ளி விளையாட்டு மைதானம் மற்றும் மேல்நிலை பள்ளி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் முஹம்மது சதக் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அலாவுதீன், சீதக்காதி அறக்கட்டளை துணை பொதுமேலாளர் சேக்தாவுது, அரசு தலைமை டாக்டர் ஜவாஹிர் ஹூசைன், டாக்டர் ஹசீம், சிறப்பு எஸ்ஐ பூமுத்து, காங்கிரஸ் நகர் தலைவர் கிருஷ்ண மூர்த்தி, ரோட்டரி சங்க தலைவர் சுப்பிரமணியன், வக்கீல் ஹமீதுசுல்தான், பேராசிரியர் சேக்யூசுப், சமூக ஆர்வலர் காதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை மிஷன் கிரீன் கீழக்கரை சார்பில் இஸ்லாமிய பள்ளிகளின் தாளாளர் முகைதீன் இபுராகீம், ஹமீதுயாசீன், எபன், சிவா செய்திருந்தனர்.

## நீர் தேவைக்கேற்ப பயிர் தேர்வு வேளாண் அதிகாரி வலியுறுத்தல்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்ட விவசாயிகள் நீர் தேவைக்கேற்ப பயிர்களை தேர்வு செய்து விவசாயம் செய்ய வேண்டும் என குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் செல்வராஜ் கூறினார். சிவகங்கை அருகே குடஞ்சாடி கிராமத்தில் நீர்வடிப்பகுதிகளுக்கான விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது. சிவகங்கை வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் தலைமை வகித்தார்.

இதில் கலந்துகொண்டு செல்வராஜ் பேசியதாவது: சொட்டு நீர்ப்பாசன முறைகள், குறைந்த அளவு நீரைப்பயன்படுத்தி வளையும் சிறுதானியங்கள், பயறு வகை சாகுபடிகளில் விவசாயிகள் ஆர்வம் செலுத்த வேண்டும். நீர் தேவைக்கேற்ப பயிர்களை தேர்வு செய்தால் வறட்சியால் பாதிக்கப்படும் நிலை ஏற்படாது. இதுபோன்ற மாற்றுப்பயிர் திட்டங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து விவசாயம் செய்ய வேண்டும் என்றார்.

பயிற்சியில் கோடை உழவின் முக்கியத்துவம், மழை நீர் சேகரிப்பு, பண்ணைக்குட்டை அமைப்பது, வரத்துக்கால்வாய் தூர் வாருதல், குளங்களில் நீர் சேமிப்பு, தெளிப்பு நீர் பாசன முறை உள்ளிட்டவை குறித்து பயிற்சி மற்றும்

தொழில்நுட்பம் குறித்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர் ராஜா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் தம்பிதுரை, மேலாளர் காளீஸ்வரி உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## "சீகுபுல்லால்" கலர்புல் லைப்! சாதிக்கும் கிராமப்புற பெண்கள்

மானாமதுரை, : சீகுபுல்லால் தயாரிக்கப்படும் விளக்குமாறு தயாரிப்பில் மானாமதுரையச் சேர்ந்த கிராமப்புற பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர். மானாமதுரை அருகே சிப்காட், நவத்தாவு, மாங்குளம், தாயமங்கலம் ரோடு உள்ளிட்ட புறம்போக்கு, தரிசு நிலங்கள், மானாவாரிப்பகுதிகளில் பல அரிய வகை மூலிகைகள் உள்ளன. அத்துடன் "சீகுபுல்" என்று ஒரு விதமான காட்டுப் புல் விளைகிறது.

இந்த புல் கொண்டு தயாரிக்கப்படும் துடைப்பம், வீட்டில் உள்ள கரப்பான் பூச்சிகள் மற்றும் கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை கொல்லும் தன்மை கொண்டதாக உள்ளதால் திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இந்த புல் கொண்டு தயாரிக்கப்பட்ட துடைப்பங்களை அதிக அளவில் வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இந்த அரிய வகை புல்கொண்டு தயாரிக்கப்படும் துடைப்பங்கள், வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மானாமதுரை அருகே சாத்தரசன்கோட்டையை சேர்ந்த முத்து இருளாயி, காளி ஆகியோர் சீகுபுல் துடைப்பம் தயாரிப்பில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளனர்.காளி என்பவர் கூறுகையில்," இந்த மண்ணில் கோரை, காட்டுகோரை, யானைக்கோரை, நாணல், சீகுபுல் என பலவகை புற்கள் உள்ளன. சீகுபுல் காட்டுப் புல் வகையைச் சேர்ந்தது. இந்த புல்லில் நுண்ணிய முட்கள் அதிகம் இருக்கும். இந்த புற்கள் சிவகங்கை மாவட்டத்தின் மானாவாரி, விவசாயநிலங்கள், தைலமரக்காடுகளில் பரவலாக கிடைக்கிறது. இந்த புல் கொண்டு தயாரிக்கப்பட்ட துடைப்பத்தை விவசாயிகள் தங்கள் வீடுகளில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தத் துடைப்பம் வீட்டில் உள்ள கரப்பான் பூச்சி மற்றும் விஷப்பூச்சிகளை விரட்டியடிக்கிறது. இதை நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதி கிராமங்களில் பெண்கள் பயன்படுத்தி வருகின்றனர்.போதிய மழை இல்லாததால் மானாமதுரை

பகுதியில் சீகுபுல் அதிகமாக கிடைப்பது இல்லை. அதனால், வெளிமாநிலங்களுக்கு மொத்தமாக அனுப்புவது குறைந்துள்ளது. ஒரு துடைப்பம் ரூ.2.50 வீதம் விற்பனை செய்கிறோம். ஒருநாளைக்கு 100 துடைப்பம் தயாரிக்கிறோம். இதில் போதுமான வருமானம் கிடைக்கிறது.

இப்போது கிடைக்கும் சீகுபுல்லை மாதம் ஒரு முறை சேகரித்து ஒரு வியாபாரி சென்னைக்குக் கொண்டு செல்கிறார். இப்போது சென்னையில் இந்த சீகுபுல் துடைப்பத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் இந்தத் துடைப்பத்தின் அருமை தெரிந்து வடமாநிலத்தவர்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்” என்றார்.

## குமரி மாவட்டம் முழுவதும் சாரல் மழை நீடிப்பு பெருஞ்சாணி அணையில் இருந்து 825 கன அடி தண்ணீர் வெளியேற்றம்

நாகர்கோவில், : குமரி மாவட்டம் முழுவதும் சாரல் மழை நீடித்து வரும் நிலையில் பெருஞ்சாணி அணையில் இருந்து வினாடிக்கு 825 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் மீண்டும் சாரல் மழை பெய்ய தொடங்கியுள்ளது. நேற்று அதிகாலை வரை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சாரல் மழை கொட்டி தீர்த்தது. சில இடங்களில் சூறைக்காற்றுடன் மழை பெய்தது. பகல் வேளையிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் மழை பெய்த வண்ணம் இருந்தது.

இதற்கிடையே மாவட்டத்தில் பாசன கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி பெருஞ்சாணி அணையில் இருந்து 825 கன அடியாக அதிகரிக்கப்பட்டு திறக்கப்பட்டிருந்தது. இதனால் கடைவரம்பு பகுதிகள் வரை பாசன கால்வாய்களில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. அணை நீர்மட்டம் 68.65 அடியாக இருந்தது.

அணைக்கு 487 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 41.40 அடியாக இருந்தது. அணைக்கு 321 கன அடி தண்ணீர் வந்து

கொண்டிருந்தது. அணை மூடப்பட்டிருந்தது. சிற்றார்-1ல் 14.46 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 18 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்-2ல் 14.56 அடியாக நீர்மட்டம் இருந்தது. அணைக்கு 31 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. பொய்கையில் 17 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது.

மாவட்டத்தில் நேற்று காலை வரை அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 28 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 7.2, பெருஞ்சாணி 4.4, சிற்றார்-1ல் 2.2, சிற்றார்-2ல் 6, இரணியல் 10.2, ஆனைக்கிடங்கு 12, குளச்சல் 12.6, அடையாமடை 13, நாகர்கோவில் 14.6, பூதப்பாண்டி 6.5, கன்னிமார் 15.4, பாலமோர் 4.6 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தரமான பயறுவகை உற்பத்தி செய்ய மானியம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**




பல்லடம்,

தரமான பயறுவகை உற்பத்தி செய்ய மானியம் வழங்கப்படுகிறது என்று வேளாண்மை துறை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

பல்லடம் வேளாண்மை துறை உதவி இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>பயறுவகை சாகுபடி</u>

பல்லடம் வட்டாரத்தில் 400 ஹெக்டேரில் உளுந்து, துவரை மற்றும் கொண்டைக்கடலை போன்ற பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்கிட வேளாண்மை துறை மூலம் பல்வேறு

தொழில்நுட்ப ஆலோசனைகளும், மானிய உதவிகளும் வழங்கிடும் வகையில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

<u>மானியம்</u>

புதிய தொழில்நுட்பத்தை விவசாயி கடைப்பிடித்திட இடுபொருள் செலவு மற்றும் தெளிப்புக் கூலிக்கு ஆகும் செலவு தொகையில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. தரமான ஒரு கிலோ பயறு வகை உற்பத்திக்கு ரூ.25 என்றவாறு மானியம் வழங்கப்பட உள்ளது. மேலும் வரிசை விதிப்பு, நீர் கொண்டு செல்லும் குழாய் வினியோகம் ஆகிய திட்டப்பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இந்த திட்டம் மூலம் பயன் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், 3 புகைப்படங்களுடன் பல்லடம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.